DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெள்ளிகிழமை 4 ம் நாள் சாட்சியாகிய ரகு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரகு | வயது | 30 |
| த/பெ. | ராஜேந்திரன் | இனம் | ஆண் |
| கிராமம் | | தொழில் | உதவி ஆய்வாளர், ஆற்காடு நகர காவல் நிலையம். |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 27/2024**
( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).
**முதல் விசாரணை 04.04.2025 அ.சா.6**

1. நான் தற்போது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் நான் 2021 ம் வருடம் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். 21.07.2021 ம் தேதி பிற்பகல் 12 மணிக்கு உதவி ஆய்வாளர் அண்ணாமலை நிலைய பொறுப்பில் இருந்த போது ஓவிய என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 321/2021 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. பிறகு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜம், கீதா முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது).**

3. பிறகு 1 முதல் 5 பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். நான் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது உதவி ஆய்வாளர் அண்ணாமலையிடம் தெரிவித்ததையே தெரிவித்ததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

4. விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் குவிமுச பிரிவு 41(ஏ)–ன் கீழ் அறிவிப்பு சார்வு செய்து 28.03.2021ம் தேதி காலை 10 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜராகிய எதிரிகளிடம் ஒப்புகை படிவம் பெற்றேன். விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**மறு விசாரணை** : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.